(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHIRAMERUR

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC. 1/2017** |
| Deposition of witness for | : | **Prosecution PW 8** |
| Name | : | Sekar SI |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**26.11.2019**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று காஞ்சிபுரத்தில் வசிக்கிறேன். கடந்த 9.12.2016ம் தேதி உத்திரமேரூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி அன்றைய தினம் 20 மணிக்கு உத்திரமேரூர் காவல்நிலையப் பொறுப்பில் இருக்குமபோது உத்திரமேரூர் சுப்ரமணியர் கோயில் தெருவைச் சேர்ந்த பத்மா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரைப் பெற்று அந்த புகார் மனுவின் தன்மை படி நிலையக் குற்ற எண் 549/2016 பிரிவு 392 இதசபடி முதல் தகவல் அறிக்கை பதவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ. 5 ஆகும். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தமப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை நான் அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இரவு 8.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஏழுமலை, உதயராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சம்பவயிடத்தைக் குறிக்கும் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். வரைபடம் அ.த.சா.ஆ. 6 ஆகும். பின்பு சாட்சிகள் பத்மா, ராஜசிம்மன், இளங்கோவன், ஏழுமலை, உதயராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து அவர்களிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

குறுக்கு விசாரணை

புகாரில் சம்பவம் 16.30 மணிக்கு நடந்ததாக உள்ளது. புகாரில் சம்பவம் வீட்டு வாசலுக்குள் நுழையும் இடத்தில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. நான் தான் வரைபடம் தயார் செய்தேன். வரைபடத்தில் சம்பவம் வீட்டுக்குள் நுழையும் இடத்தில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் வீட்டின் முன்பு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் புகார் 9.12.2016ம் வருடம் இரவு 8 மணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. புகார்

பெற்றவுடன் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அன்றைய தினமே இரவு 20.15 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். புகாா் கிடைத்து கால் மணி நேரத்தில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்துவிட்டேன். என்னிடம் காட்டப்படுவதுதான் புகார்தாரர் கொடுத்த புகார். புகாரில் மாதம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 392 என்று எழுதுவதற்கு பதில் 302 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த தெருவில் தெரு விளக்குகள் உள்ளது. வாதியின் வீட்டிலும் மின் விளக்குகள் உள்ளது. எனவே டார்ச் லைட் எதுவும் தேவைப்படவில்லை நானும் எடுத்துச் செல்லவில்லை . நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு வாதியின் மகன் இருந்தார். நான் வரைபடம் வரைந்த சமயத்தில் பார்வை மகசர் சாட்சிகளான துரைராஜ், ஏழுமலை சம்பவ இடத்திற்கு வந்தார்கள். 20.30 மணிக்கு பார்வை மகசர் தயார் செய்து உடனிருந்த சாட்சிகளை விசாரித்தேன். மற்ற சாட்சிகளை ஆய்வாளர் விசாரித்தார். என்னிடம் ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் சொன்ன தேதி நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால்சரியல்ல. நான் சாட்சிகளை விசாரணை வெசய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கொடுத்த முன்தேதி இட்ட பொய்யான புகாரை பெற்று எதிரி மீது தவறுதாலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால்சரியல்ல.

*ஓம். வே. இருதயராணி,*
மாவட்ட உரிமையியல் மற்றும குற்றவியல்
*நடுவர், உத்திரமேரூர்.*